1984 மார்ச் 6]

இணைப்பு VIII.

(333 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத—59 வினா எண் 12552 க்கான விடையைக் காண்க.]

(அ) சேமிப்பின் அவசியத்தினை இளம் வயது முதற் கொண்டே கற்றுக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் சஞ்சயிகா என்ற பள்ளி சேமிப்புத் திட்டம் தமிழகத்தில் சிறப் பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ஊக்கத் தோடு செயல்படும் பள்ளிகளுக்கு மாநில மற்றும் மாவட்ட அள வில் ஒவ்வொரு ஆண்டும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தை மேலும் விளம்பரப்படுத்த வேண்டும் என்ற அடிப் படையில் 1982—83 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாடநூல் நிறுவனத் தினரால் வெளியிடப்படும் ஒரு லட்சம் நோட்டுப் புத்தகங்களின் பின் பக்கத்தில் பள்ளி சேமிப்பு வங்கி பற்றி விளம்பரம் வெளியிட அரசு ஆணையிட்டுள்ளது. சிறு சேமிப்பின் அவசியத்தினை உணர்த்தும் பொருட்டு ஆண்டுதோறும் பள்ளி, கல்லூரி அளவில் மாணவ, மாணவிகளுக்கான நாவண்மைப் போட்டி நடத்தப்பட்டு பரிசுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

(ஆ) 1980—81 ஆம் ஆண்டில் மட்டும் 2,71,336 மாணவ மாணவியர்கள் இத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

இணைப்பு IX.

(349 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத—93 வினா எண். 3603-க்கான விடையைக் காண்க)

(அ) நீர் நுட்பவியல் மையம் ஒன்று கோவையில் ஸ்வீடன் நாட்டு உதவியுடன் ஆரம்பிக்க திட்டம் உள்ளது.

(ஆ) அமைக்க இருக்கும் நீர் நுட்பவியல் நிலையத்தின் பணி கள் கீழ் வருமாறு:—

(1) முற்போக்கான ஆய்வுகளும், ஆராய்ச்சிகளும் நீர்த் தேக்கம், கட்டுப்பாடு, வளர்ச்சி, பயன்படுத்துதல் ஆகிய துறை களை ஒருங்கிணைத்து செயல்படுத்துதல்.

(2) அடிப்படையும், அதனைச் சார்ந்த கோணங்களில் வேளாண்மை தொழிற் கூடங்கள், வீட்டிற்குத் தேவையான நீரைப் பயன்படுத்துதலை ஆராய்ச்சி செய்து பரிந்துரைத்தல்.

(3) பயிர், மண், பொறியியல், பொருளாதாரம் முதலிய துறைகளைக் கற்பிப்பதன் மூலம் மாணாக்கர்கட்கு, பரந்த அறி வினைப் புகட்டுதல்.

(4) பல்துறை இணைந்த ஆராய்ச்சிகளால் நீரைச் சேமித் தல், நீர் சுழற்சிகளை ஆராய்ச்சி செய்து அவற்றால் நீர்ப்பாசன வடிகால் முறைகளை அறிவியல் ரீதியில் நீரின் தன்மையால் நிலத்திற்கு ஏற்படும் தீமைகளை அகற்றி நிலவளத்தைப் பெருக்க முயற்சித்தல்.